# மாகாணக்கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## இரண்டாம் தவணைப்பரீட்சை - 2019

| தரம்:11 | தமிழ்மொழியும் இலக்கியமும் | நேரம்: 1.00 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண்:…………………………………………………………………………… | 22 | T | I | |

## பகுதி –I

***1 தொடக்கம் 40 வரையுள்ள வினா ஒவ்வொன்றிலும் (1), (2), (3), (4) என இலக்கமிடப்பட்ட விடைகளில் சரியான அல்லது மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.***

❖ **தடித்த எழுத்தில் உள்ள சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

01. "கொற்றத்தார்க் குரிசில் இவர் ஆர்?" இங்கு **குரிசில்** என்பது,
(1) மந்திரி (2) மாலை (3) தலைவன் (4) உறவினர்கள்

02. "புலன்களோடு கரணமும் ஆவியும் போந்து நின்ற…." இங்கு **கரணம்** என்பது
(1) தேகம் (2) முகம் (3) மனம் (4) கை

03. நந்து ஊரும் புனல் நாடு – என்பதில் **நந்து** என்பதன் பொருள்,
(1) நந்தவனம் (2) சங்கு (3) தேவர் (4) சினம்

04. "செயிருடன் சென்ற சேயிளம் பெண்….." இதில் **செயிர்** என்ற சொல்லிற்கான எதிர்க்கருத்துச் சொல்
(1) துன்பம் (2) சாந்தம் (3) கோபம் (4) தெளிவு

05. "ஊனையும் உடலையும் ஊட்டி இம்மண்ணை…." என்பதில் **ஊன்** என்பதன் பொருள் யாது?
(1) இறைச்சி (2) உணவு (3) உருகி (4) அணிதல்

❖ **பின்வரும் வினா ஒவ்வொன்றுக்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

06. மயில், பெண், இறகு எனும் பல பொருள் தரும் சொல்
(1) மங்கை (2) தோகை (3) இறை (4) செட்டை

07. ட்ரஜிடி (Tragedy) என்ற ஆங்கிலச் சொல்லின் தமிழ் வடிவம்,
(1) இன்பவியல் (2) குறுநாவல் (3) துன்பியல் (4) தர்க்கம்

08. பொருத்தமற்ற சொற்களின் இணைப்பு,
(1) ஆதித்தன் - ஆதவன் (2) இலட்சியம் - குறிக்கோள்
(3) ஓம்புதல் - பாதுகாத்தல் (4) உளவு – வேளாண்மை

09. பிறர் தம்மை இன்னார் என்று அறியாதவாறு மாறுவேடம் பூண்டு மக்கள் மத்தியில் வசித்தல்,
(1) வனவாசம் (2) மறைவில்லாதுவாழல் (3) அஞ்ஞாதவாசம் (4) கழிவிரக்கம்

10. ஆட்டின் மலம் பிழுக்கை என்பது போல ஒட்டகத்தின் மலம்,
(1) சாணம் (2) இலத்தி (3) விட்டை (4) பிழுக்கை

kalvi.lk

11. விழலுக்கிறைத்தல் எனும் மரபுத் தொடரின் கருத்து
(1) ஊதாரிச் செலவு (2) வள்ளண்மை
(3) வீண்பாடுபடுதல் (4) மிகவும் எளியது

12. இயல்புப்புணர்ச்சி இடம்பெற்றுள்ள சொல்
(1) மரவேர் (2) கடலலை (3) பூசணிக்காய் (4) கடற்கரை

13. பின்வருவனவற்றுள் வேற்றுமை உருபு ஏற்கும் போது வடிவம் திரிபடையும் சொல்
(1) நீ (2) மரம் (3) அவர்கள் (4) காது

14. ''நாயும் தின்னாச் சோறு'' என்பதில் உம் இடைச்சொல் உணர்த்தும் பொருள்?
(1) பிரிநிலை (2) ஐயம் (3) மிகைப்பொருள் (4) இழிவுச் சிறப்பு

15. ''ஒருவன் தன் நிலையிலிருந்து தாழ்வானாயின் அற்பர்களும் அவமதிப்பர்'' என்ற கருத்தைத் தரும் பழமொழி
(1) காகம் திட்டி மாடு சாகாது
(2) சேற்றில் புதைந்த யானையை காகமும் கொத்தும்
(3) உருட்டும் புரட்டும் ஒடுக்கும்சிறப்பை
(4)கங்கையில் மூழ்கினாலும் காக்கை அன்னமாகுமா?

16. ''பானையில் உண்டானால் அகப்பையில் வரும்'' என்ற பழமொழியின் கருத்து யாது?
(1) ஒருவரிடம் உள்ளீடான அறிவு இல்லாவிட்டால் சிறந்த கருத்துக்கள் வெளிப்படமாட்டாது.
(2) உலோபியினுடைய பொருள் பிறரால் களவாடப்படும்.
(3) சிறு தீமையும் தவிர்ப்பது நன்மை தரும்
(4) ஒருவரிடம் உள்ளீடான அறிவு இல்லாவிட்டால் சிறந்த கருத்துக்கள் வெளிப்படும்.

17. சிறாம்பு என்பது எப் பிரதேச வழக்குச் சொல்
(1) மலையகம் (2) தெற்கு (3) வடக்கு (4) கிழக்கு

18. ஆன்றோர் முன்னிலையில் சொல்லத்தகாத சொல்லை வேறொரு வகையில் கூறுவது
(1) இடக்கரடக்கல் (2) மரூஉ (3) குழூஉக்குறி (4) போலி

19. பின்வருவனவற்றுள் தனிப் பெயரடையாக அமைந்தது
(1) குறுகிய (2) அழகான
(3) மிகப்பெரிய (4) வேகமான

20. பச்சைப் பசேலென பரந்த புல்வெளி. இங்கு பச்சைப்பசேல் என்பது
(1) அடுக்குத்தொடர் (2) இணைமொழி
(3) அடுக்கிடுக்குத்தொடர் (4) இரட்டைக்கிளவி

21. கடந்த ஆண்டு நடைபெறும். என்பது,
(1)திணைவழு (2) காலவழு (3) எண்வழு (4) இடவழு

22. மரத்தினது வேர் என்பது,
(1) 1ஆம் வேற்றுமை (2) 3ஆம் வேற்றுமை
(3) 6ஆம் வேற்றுமை (4) 4ஆம் வேற்றுமை

23. பின்வருவனவற்றுள் வினையடியாகப் பிறந்த ஆக்கப் பெயர்
(1) முயற்சி (2) புத்திசாலி (3) நீரேரி (4) வாகீசன்

24. நீ படிக்கவோ வந்தாய். என்பதில் ஓகாரம் உணர்த்தும் பொருள்
(1) எதிர்மறை (2) நேர்மறை (3) கருவிப்பொருள் (4) தெரிநிலை

25. முட்டாள் என்பதைப் பிரித்தெழுதும் முறை

(1) முட் + ஆள் (2) முள் + ஆள்

(3) முட் + தாள் (4) முள் + தாள்

26. எனது தாயார் விருந்தினருக்கு அறுசுவை உணவு பரிமாறினார். இங்கு அறுசுவை என்பது,

(1) வினைத்தொகை (2) பண்புத்தொகை

(3) உம்மைதொகை (4) உவமைத்தொகை

27. பின்வருவனவற்றில் ஒன்றுக்கு மேற்பட்ட சொற்கள் எழுவாயாக அமையப்பெற்ற வாக்கியம்

(1) ஆசிரியரோடு மாணவர்கள் வந்தனர்

(2) மாணவர்கள் ஆசிரியருடன் வந்தனர்

(3) ஆசிரியரும் மாணவர்களும் வந்தனர்

(4) மாணவர்களுடன் ஆசிரியர் வந்தார்.

28. இம்முறை போதுமான மழை பெய்தது
நெல் விளைச்சல் அதிகரிக்கவில்லை
இரு வாக்கியங்களையும் இணைப்பதற்கு மிகப் பொருத்தமான இணைப்பிடைச் சொல்

(1) ஆகவே (2) ஆயினும் (3) எனவே (4) அத்துடன்

❖ **பொருத்தமற்ற உதாரணம் இடம்பெற்றுள்ள தொகுதியை தெரிவு செய்க**

29. (1) வல்லினம் :- க், ச், ட், த், ப், ற்

(2) புறச்சுட்டு :- அவன், இவன், உவன்

(3) சந்தியக்கர எழுத்துக்கள் :- ஐ, ஔ

(4) இடையினம் :- ய், ர், ல், வ், ழ், ள்

30. (1) கூட்டுப்பெயர் :- மின்சாரநிலையம், எழுதுகோல், பறிமுதல்

(2) தொழிற்பெயர் :- காணுதல், நடத்தல், கூவுதல்

(3) ஆக்கப்பெயர் :- பனையோலை, கடலலை, விடுகாலி

(4) வினையாலணையும் பெயர் :- போனவன், வந்தவன், நடந்தவன்

❖ **புள்ளிக்கோடிட்ட இடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க**

31. வியாபாரத்தின் மூலம் பெருஞ்செல்வத்தைச் சேர்த்ததினால் அவர் ………………. ஆக விளங்கினார்.

(1) கனவான் (2) தனவான் (3) குணவான் (4) பலவான்

32. இக்காலத்தில் வெளிவரும் சில கவிதைகள் ………………..…. இல்லாத வெறுஞ் சொற்கோப்புக்களாகவே காணப்படுகின்றன.

(1) அடியீடு (2) குறியீடு (3) வகையீடு (4) உள்ளீடு

33. அத்தியாவசியப் பொருள்களின் விலை உயர்வைக் கட்டுப்படுத்த ஆணைக்குழு செய்த ………………. அரசாங்கத்தினால் பரிசீலனை செய்யப்படுகிறது.

(1) ஆய்வுரை (2) பரிந்துரை (3) மதிப்புரை (4) அணிந்துரை

34. வறியவர்களுக்கும் வலது குறைந்தோருக்கும் முதியோருக்கும் உண்டியும் உறையுளும் கொடுத்து ஆதரிப்பதற்கென …………………… அமைக்கப்பட்டுள்ளன.

(1) அன்னசாலைகள் (2) ஆதுலர்சாலைகள்

(3) ஆச்சிரமங்கள் (4) பாசறைகள்

35. ஒரு வேலையை குறிப்பிட்ட கால எல்லைக்குள் நிறைவேற்றித் தருவதாக ஒருவருக்கு ………………. அளித்தால் அதனை மீறக்கூடாது

(1) ஒப்பந்தம் (2) ஓம்படை (3) உத்தரவாதம் (4) உச்சவரம்பு

36. மைதான நிகழ்வுகளைக் காண நண்பர்கள் கூட்டமாக மைதானத்திற்குச் ………………..
(1) சென்றனர் (2) சென்றன (3) சென்றது (4) சென்றார்

❖ **கீழ்வரும் பாடலை அடிப்படையாகக் கொண்டு வினாக்களுக்கு விடை தருக**

கோழிக் கூடா லயம் அமைச்சி
கொள்ளப் பக்கம் பீலாயும் வச்சி
கும்மிருட்டில் வாழ விட்டான்
கொடும காரனே – நம்ம
சொக மேதும் கண்டதுண்டா
சொல்லு மச்சானே
வெளிச்சத்துல வாழ்ந்த மனா
விசயங்கள் வெளங்கிக்குவோம்
அதனால அடக்கி வைச்சான்
ஆங்கிலேயனே – அது தான்
ஆண்டாண்டா தொடர்ந்திருக்கு
அன்பு மச்சானே.

37. இப்பாடல் எப்பிரதேசத்திற்குரியதாக அமைகிறது?
(1) மலையகம் (2) வடக்கு (3) கிழக்கு (4) மேற்கு

38. அடக்கி ஆண்டான் என்று குறிப்பிடப்படுவது
(1) மச்சானை (2) ஆங்கிலேயரை (3) மக்களை (4) ஏழைகளை

39. "கும்மிருட்டில் வாழவிட்டான்" என்ற தொடர் மூலம் உணர்த்தப்படுவது யாது?
(1) வெளிச்சத்தில் வாழல்
(2) இருட்டில் வாழல்
(3) வசதிகளுடன் வாழல்
(4) எவ்வித வசதிகளையும் செய்து கொடுக்காமல் இருத்தல்

40. **கீழே சில வாக்கியங்கள் ஒழுங்கின்றிக் காணப்படுகின்றன. அவற்றை ஒழுங்குற வைத்தால் கட்டுக்கோப்பான பந்தி ஒன்று அமையும். அதற்கேற்ற பொருத்தமான வைப்பு முறையைத் தெரிவு செய்க**

அ. குரல் பயிற்சி மிக முக்கியமான ஒன்று
ஆ. வார்த்தைகளிலே ஏற்றத்தாழ்வு இருக்க வேண்டும்
இ. பேசும் போது மென்மையாகவும் வன்மையாகவும் பேச வேண்டிய வார்த்தைகள் உண்டு.
ஈ. எனவே பல்வேறுபட்ட உணர்ச்சிகளை எளிதாகக் காட்ட இப் பயிற்சி முக்கியமாகும்.
உ. அன்பு காட்டிப் பேசுவதும் ஆத்திரத்தோடு பேசுவதும் குரலிலேயே தெரிய வேண்டும்.

(1) இ, உ, அ, ஆ, ஈ (2) இ, ஈ, அ, உ, ஆ
(3) அ, இ, ஆ, உ, ஈ (4) உ, ஈ, இ, ஆ, அ

kalvi.lk

# மாகாணக்கல்வித் திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## இரண்டாம் தவணைப்பரீட்சை - 2019

| தரம்:11 | தமிழ்மொழியும் இலக்கியமும் | நேரம்: 2.00 மணித்தியாலம் |
|---|---|---|

| சுட்டெண்:........................................................................... | 22 | T | II |
|---|---|---|---|

## பகுதி – II

1) **சுருக்கமான விடை தருக.**

1. பின்வரும் தொடரைச் சந்தி பிரித்தெழுதுக.
   ‘‘எல்லையிலா வின்படைதற் கிடையூறென் றேயியம்பாய்’’
2. ‘‘குணக்குன்றாய் உழைத்துண்ணும் இலவிளக்காம் மனிதன்’’
   அ) இப்பாடலடியில் வரும் அணியை குறிப்பிடுக?
   ஆ) இப்பாடலடியில் இடம் பெற்றுள்ள தொகையை இனம் காண்க?
3. பின்வரும் வாக்கியத்திற்கு பொருத்தமான குறியீடுகளை இட்டு எழுதுக.
   தலை இருக்க வால் ஆடக்கூடாது எல்லாத்துக்கும் ஐயா வரட்டும் என்று சொல்லிக் கொண்டு அம்மா போகின்றார்.
4. பின்வரும் குறட்பாவைக் கொண்டு கூட்டி எழுதுக.
   பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கண் பீழை தருவதொன்றில்
5. ‘‘சிநேகிதன் மாரோடை ரவுணுக்கு சயிக்கிளிலே போக வெளிக்கிட்டார்’’
   இப்பேச்சு வழக்குத் தொடரை எழுத்து வழக்கிற்கு மாற்றி எழுதுக.
6. அ) 2019ஆம் ஆண்டிற்கான க.பொ.த உயர்தர பரீட்சைகள் யாவும் ஆவணி மாதம் நடைபெறும்.
   ஆ) மாணவர்கள் பரீட்சை மண்டபத்திற்கு உரிய அனுமதி அட்டகளை எடுத்து வர வேண்டும்.
   இவ்வாக்கியங்களில் அறிவுறுத்தல் எது? அறிவித்தல் எது?
7. ‘‘அவர்களுள் இவளே அழகி’’ இவ்வாக்கியத்தில் இடம் பெறும் இடைச்சொல் யாது? எப்பொருளில் வந்துள்ளது?
8. நேர்முகவர்ணனையாளன் ஒருவனுக்கு இருக்க வேண்டிய பண்புகள் இரண்டு தருக?
9. ஆலி, ஆழி இச் சொற்களின் கருத்துப் புலப்படுமாறு அவற்றைத் தனித்தனி வாக்கியங்களில் எழுதுக?
10. உயர்ந்தவரை பார்த்தீர்களா? என்பதன் இரு வேறுபட்ட கருத்துக்களையும் தருக?

(2x10=20 புள்ளிகள்)

kalvi.lk

2) **பின்வருவனவற்றுள் ஒன்றைத் தெரிவு செய்து 250 சொற்களில் அமையுமாறு விடை எழுதுக. நீங்கள் தெரிவு செய்த விடயத்திற்குப் பொருத்தமான தலையங்கம் இடுக.**

i. பெண் கல்வி பண்டைய இலக்கியங்களிலே போற்றப்பட்டுள்ளது. இப் பெண் கல்வியானது பாரதியார் காலம் தொடக்கம் தற்காலம் வரை சிறப்படைந்து இன்று பெண் உயர்நிலைப்படுத்தப்பட்டுள்ளாள். மகளிர் அமைப்புக்கள் தோற்றம் பெற்று மகளிர் தினம் கொண்டாடப்பட்டு வருகின்றது. இவற்றை அடிப்படையாகக் கொண்டு பெண்களின் அன்றைய நிலையும் இன்றைய நிலையும் என்ற பொருளில் ஒரு விளக்கக் கட்டுரை.

ii. மனித சமூகவாழ்வுக்குத் தொடர்பாடல் மிக முக்கியத்துவம் வாய்ந்ததாகக் காணப்படுகிறது. இவற்றுக்குத் தொடர்பாடல் சாதனங்களின் பங்களிப்பு மிகமிக அவசியமாகும் இந்த வகையில் வெகுசனத் தொடர்பு சாதனங்களின் முக்கியத்துவம் பற்றி மாணவர் மன்றத்தில் நீர் ஆற்றும் சொற்பொழிவு

iii. எமது நாட்டில் அமைதி நிலை ஏற்பட்டுள்ள சூழலில் உல்லாசப் பயணிகளின் வருகை அதிகரித்துச்செல்லும் அதேவேளை போதைப்பொருள் பாவனையும் அதிகரித்துச் செல்கிறது. இது நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில் மாற்றத்தை ஏற்படுத்திச் செல்லும் நிலையில் மறுபக்கம் பல சீர்கேடுகளையும் உண்டு பண்ணி வருகிறது. இக்கருத்தை அடிப்படையாகக் கொண்டு இருவருக்கிடையிலான உரையாடல்.

iv. அரசாங்க உத்தியோகத்தில் உள்ள கணவனை இழந்த இளம் பெண் ஒருத்தி தனது ஒரே மகனை உயர்ந்த குணப்பண்புகள் கொண்டவனாகவும் உயர்ந்த பதவியில் அவனை அமர்த்திப் பார்க்க வேண்டும் என்ற ஆசையுடனும் வளர்ப்பதோடு தானும் உயர்கல்வியை கற்கின்றாள். எவரினது துணையுமின்றி மனவைராக்கியத்துடன் தனது வாழ்கையை நடத்திவரும் அவளது விருப்பம் நிறைவேறும் என்கின்ற எதிர்பார்ப்பு இக் கருவை அடிப்படையாகக் கொண்ட ஒரு சிறுகதை.

(25 புள்ளிகள்)

3) **பின்வரும் உரைப்பகுதியின் சுருக்கத்தை 40 – 45 சொற்களில் அமையக் கூடியவாறு சுருக்கி எழுதுக.**

அறிவு என் உடம்பில் எங்கு இருந்தாலும் அது மேலும் மேலும் பெருகுவதற்கு நிறைய இடம் இருக்கிறது. அறிவு நிரம்பிவிட்டது. இனி இடமில்லை என்கின்ற நிலைமை எந்நாளும் ஏற்புடையதன்று. இவ்வாறு நானே அறிவிற்குறைந்தவளாயிருக்கும் போது பிறருக்கு உபதேசிக்கக் கூடிய முற்றும் நிறைந்த ஞானியாக நான் நடிப்பது எங்ஙனம்? எது நியாயம். இது நியாயம் இல்லை. செய்யத்தக்கது எது. செய்யத்தகாதது எது? என்று அறிவதற்கு சிறந்த வழி நீண்ட நேரம் பிறருக்கு பிரசங்கம் நிகழ்த்துவது அல்ல. மாறாக பிறருடன் கலந்து பேசி விவாதிக்க வேண்டும். நாம் பலவற்றை பற்றிக் கலந்து பேச வேண்டும். ஆனால் இவ்வுலகமோ பெரிது. இவ்வுலகத்திற்கு அப்பால் வியக்கத்தக்க வேறு பல உலகுகளும் இருக்கின்றன. ஆகவே யுவான்சுவாங் கதையில் வரும் அந்தக் கர்வங்கொண்ட மூட மனிதனைப்போல கற்க வேண்டியதை எல்லாம் கற்று நிரம்பிவிட்டோம் என்று இராமல் கடலின் ஆழத்தை அறிய முடியாதது போல் கல்வியின் ஆழத்தையும் அறிய முடியாது என்பதை உணர்ந்து மேலும் கற்றலே அறிவுடைமையாகும். எல்லாம்

கற்றுத் தெளிந்தவர்கள் என்று சொல்லக்கூடியவர்கள் இருந்தால் அவர்கள் கூட இன்னும் கற்பதற்கும் ஒன்றும் இல்லையே என்று சில சமயங்களில் ஏக்கமடைவார்கள். அறிவினால் புதிது புதிதாகக் கண்டு பிடிக்கும் இன்பத்தை அத்தகையவர்கள் இழக்க நேரிடும். நம்மில் விரும்புவோர் எவ்வின்பத்தை அடையலாம் என நினைக்கின்றோமோ அவ்வின்பத்தை அடைந்து நற்பயன் பெறலாம்.

(10 புள்டளிகள்)

4) பின்வரும் உரைநடைப் பகுதியினை வாசித்து அதன் கீழ் தரப்பட்டுள்ள வினாக்களுக்கு விடையளிக்குக.

பாரதிக்குப் பின்னர் கவிதை வளர்ச்சியின் ஒரு முக்கிய மையப்புள்ளியாக அமைவது மணிக்கொடிகாலமே. தமிழின் நவீன இலக்கிய வளர்ச்சியின் அச்சாணியான புனைகதை. வளர்ச்சியை இது தமிழ் நிலைப்படுத்துகிறது. புதுமைப்பித்தன், கு.ப.ரா போன்றோர் சிறுகதைத் துறையிலும் க.நா.சு. சண்முகசுந்தரம் போன்றோர் நாவல் துறையிலும் சாதனைகளை நிலை நாட்டினர். சந்தமரபுகளுக்கு அப்பாலான சொல்லோவியங்களினூடாக ஒரு புதிய கவித்துவ நெறி தோற்றுவிக்கப்படுகிறது.

மணிக்கொடி காலத்திலே புதுமைப்பித்தன், ரகுநாதன் ஆகியோர் சில பரீட்சார்த்தங்களை மேற்கொண்டனர். ஆயினும் இவர்களிடத்திலிருந்த மரபு வழித் தமிழிலக்கிய அறிவு காரணமாக இவர்கள் வெண்பா, அகவல் போன்ற யாப்புக்களை நன்கு பயன்படுத்தினர். மணிக்கொடிக் காலத்திலேயே தமிழில் புதுக்கவிதையானது மேலும் பின்போகத்தக்க ஒன்றாக ஆகிவிடாது இலக்கியக் கவனிப்பை ஈர்த்தது. ஏறத்தாழ 1950 இன் பின்னர் தமிழ்க்கவிதையில் பாரதிதாசன் பரம்பரையினர் ஒரு புறமாகவும் கவித்துவப்பரீட்சார்த்திகள் இன்னொருபுறமாகவும் முக்கியமடையத் தொடங்குகின்றனர். இவை யாவற்றிற்கும் மேலாக பாரதி தமிழின் மஹாகவிகளுள் ஒருவரென்று நிறுவப்பட்டது. மணிக்கொடிக் காலத்திலேயே.

1. தமிழ் புதுக்கவிதை தோற்றம் பெற்ற காலப் பகுதி எது?
2. புனைகதை வளர்ச்சியிலே ஒரு புதிய கவித்துவ நெறியினைத் தோற்றுவித்தவர்கள் யாவர்?
3. தமிழின் மகாகவியாக விளங்குபவர் யார்?
4. புனைகதை இலக்கிய வடிவங்கள் எவை?
5. மணிக்கொடிக் காலத்தின் சிறப்பம்சங்கள் இரண்டினைக் குறிப்பிடுக?

(10 புள்ளிகள்)

5) மனிதனது பல்வேறு நடவடிக்கைகள் சூழலில் பாதிப்பினை ஏற்படுத்துகின்றன. அந்த வகையில் பொலித்தீன் பாவனையும் ஒன்றாகும். இருப்பினும் நம்மால் பொலித்தீன் பாவனையைக் கட்டுப்படுத்த முடியவில்லை. இதனால் பல்வேறு பிரச்சினைகள் எழுகின்றன. இப்பிரச்சினைகளைச் சுட்டிக்காட்டியும் அதைத் தீர்ப்பதற்கான வழிமுறைகளைச் குறிப்பிட்டும் பத்திரிகை ஒன்றின் ஆசிரியருக்கு 100 சொற்களில் ஒரு கடிதம் எழுதுக.

**அல்லது**

அதிகரித்து வரும் போதைப் பொருட் பாவனையைத் தடை செய்யும் வகையில் பாடசாலை மாணவர்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் முகமாக 100 சொற்களில் ஒரு துண்டுப் பிரசுரம் எழுதுக.

(15 புள்ளிகள்)

kalvi.lk

# மாகாணக்கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்
## இரண்டாம் தவணைப்பரீட்சை - 2019

| தரம்:11 | தமிழ்மொழியும் இலக்கியமும் | நேரம்:2.00 மணித்தியாலம் |
|---|---|---|

சுட்டெண்:........................................................................ | 22 | T | III |

### பகுதி III

**1,2,3,4 ஆகிய வினாக்களுக்கும் 5,6,7 ஆகிய வினாக்களில் ஏதாவது ஒரு வினாவிற்கும் விடை எழுதுக.**
**(01) சுருக்கமான விடை தருக**

I. "வென்றி முரசின் வேந்தர் எம் குன்றும்
கொண்டார் யாம் எந்தையும் இலமே."
(அ) மேற்படி பாடல் இடம்பெறும் இலக்கியம் எது?
(ஆ) இப்பாடலில் குறிப்பிடப்படும் குன்று யாது?

II. "தென்றலிலே அசைந்தாடும் செந்நெல்வயற் கதிர்கள் தேனருவிளன வழியும் ஏருழவன் வியர்வை"
(அ)"தேனருவிளன வழியும் ஏருழவன் வியர்வை" என்ற தொடரின் பொருள் யாது?
(ஆ) ஏர் உழவன் என்பது எவ்வகைத் தொகை?

III. "நம்ம உம்மாவ வூட்டுக்க ஒளிச்சு வச்சிருக்கலாம் என்னகா?"
(அ) இக்கூற்று யாரால், யாருக்கு கூறப்பட்டது?
(ஆ) இக்கூற்றின் மூலம் உணர்த்தப்படும் பிரதான விடயம் எது?

IV. "தொடித்தலை விழுத்தண்டுன்றி….."
(அ) இங்கு தொடி, தண்டு என்பவற்றின் பொருள் யாது?
(ஆ) இப்பாடலில் இடம்பெறும் துறை யாது?

V. "ஒருமைச் செயலாற்றும் பேதை எழுமையும்
தான்புக்கு அழுந்தும் அளறு"
(அ) இங்கு எழுமை என்பதன் கருத்து யாது?
(ஆ) "அழுந்தும்" என்பதன் மூலம் உணர்த்தப்படுவது யாது?

VI. "கொடுமையால் அளந்தாளை ஆர் அவர்? என்று உரை"
(அ) இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?
(ஆ) "கொடுமையாள் அளந்தாள்"எனக் குறிப்பிடப்படுவது யாரை?

VII. "நீங்கக் காண்பது சேர்ந்தவர் பாவம்
நெருங்கக் காண்பது கன்னலிற் செந்நெல்"
(அ) இங்கு கன்னல் என்பது?
(ஆ) "நீங்கக் காண்பது" என குறிப்பிடப்படுவது யாது?

kalvi.lk

VIII. நரகம்புகினும் எள்ளேன்''
(அ) இக்கூற்றை கூறியவர் யார்?
(ஆ) ''எள்ளேன்'' என்பதன் பொருள் யாது?

IX. ''யானை அனையவர் நண்பு ஒரீஇ…..''
(அ) இங்கு ஒரீஇ என்பதன் பொருள் யாது?
(ஆ) இப் பாடல் மூலம் உணர்த்தப்படும் படிப்பினை யாது?

X. ''பறம்பு மலை மக்களின் அன்பை எப்படி விட்டுச்செல்வது''
(அ) இக்கூற்று யாரால் யாருக்கு கூறப்பட்டது?
(ஆ) இக்கூற்றின் மூலம் வெளிப்படும் உணர்வு யாது?

($10 \times 2 = 20$ புள்ளிகள்)

**(02) பின்வரும் செய்யுட் பகுதிகளையும் உரைநடைப் பகுதிகளையும் வாசித்து கீழே உள்ள வினாக்களுக்கு விடை தருக**

1. இனி நினைந் திரக்க மாகின்று திணிமணற்
செய்யுறு பாவைக்குக் கொய்பூத் தை இத்
தண்கய மாடு மகளிரொடு கைபிணைந்து
தழுவுவழித் தழீஇத் தூங்குவழித் தூங்கி
மறையென லறியா மாயமி லாயமொ
டுயர்சினை மருதத் துறையுறத் தாழ்ந்து
நீர் நணிப் படிகோ டேறிச் சீர் மிகக்
கரையவர் மருளத் திரையகம் பிதிர
நெடு நீர்க் குட்டத்துத் துடுமெனப் பாய்ந்து
குளித்த மணற் கொண்ட கல்லாவிளமை
அளிதோ தானே யாண்டுண்டு கொல்லோ
தொடித்தலை விழுந்தண்டுன்றி நடுக்குற்
றிருமிடை மிடைந்த சில சொற்
பெருமூ தாளரே மாகிய வெமக்கே.

(அ) இங்கு முதுமைத்தன்மை எவ்வாறு எடுத்துக்காட்டப்படுகிறது?
(ஆ) ''மறையென லறியா மாயமி லாயமொடு'' என்ற அடி மூலம் நீர் விளங்கிக் கொள்வது யாது?

**II**. சுற்றத்தார் தேவரொடும் தொழுதுநின்ற
கோசலையைத் தொழுது நோக்கி
''கொற்றத்தார்க் குரிசில்'' இவர் ஆர்? என்று
குகன் வினவ, கோக்கள் வைகும்
முற்றத்தான் முதல் தேவி, மூன்று
உலகும் ஈன்றானை முன் ஈன்றானைப்
பெற்றத்தால் பெறும் செல்வம், யான் பிறத்தலால்
துறந்த பெரியாள் என்றான்

(அ) இப்பாடலில் கோசலையின் சிறப்புக்களை எடுத்துரைக்க.
(ஆ) இப்பாடல் இடம்பெற்ற சந்தர்ப்பம் யாது?

**III.** கழியும் பிழை பொருட் டள்ளி நன்நூலாங் கடலிலுண்டு
வழியும் பொதிகை வரையினிற் கால்கொண்டு வண் கவிதை
மொழியும் புலவர் மனத்தே யிடித்து முழங்கி மின்னிப்
பொழியும் படிக்குக் கவிக்காள மேகம் புறப்பட்டதே.

(அ) இப்பாடலில் புலவரின் புலமை எவ்வாறு வெளிப்படுத்தப்படுகின்றது?
(ஆ) இப்பாடலில் இடம்பெறும் சிறப்புக்களை எடுத்துக்காட்டுக.

Education கல்வி அධ්‍යාපන

**IV.** பக்குவமாய் பணியாரம் செய்து பனைநார்ப் பெட்டியில் மூடி மாடாவில் மறைத்து வைத்தது போல இவ்வளவு கவனமாக இந்தக் கதையைக் கோப்பிலே செருகி வைத்தேனே. எங்கே போனது? இறக்கை முளைத்துப் பறந்துவிட்டதோ? பனிமூடிய அந்த அதிகாலையிலும் நான் நண்பரைத் தேடிக் கொண்டு ஓடினேன். ஆத்திரத்தோடு நண்பர் அவுக் கென எழும்பி இரண்டில் ஒன்று பார்ப்பது என்று பாய்ந்து வந்தார்.

(அ) மாடா என்பதன் பொருள் யாது?

(ஆ) "கதை இறக்கை முளைத்துப் பறந்துவிட்டதா" என்பதனூடாக நீர் விளங்கிக் கொள்வது யாது?

**V.** இந்தக் கிராமத்தின் முடி சூடா குட்டிராணியாய், பொது மனுஷியாய் மூத்தம்மா தான் இருந்தா. அனுபவம் பழுத்த அவவிடம் அறிவு தேஜஸ், சட்டெனத் தெரியும். நானும் மூத்த வாப்பாவும் காட்டிற்குப் போய் ஆமணக்குக்கொட்டை பொறுக்கிக் கொடுப்போம். அதை இடித்து உருக்கி உளுவரிசியும் நன்னாரி வேரும் நறுக்கிப் போட்டு எண்ணெயாய்க் காய்ச்சி தலைக்குப் பூசுவார்.

(அ) இவ்வுரைப் பகுதியில் காணப்படும் கிராமியப்பழக்கம் யாது?

(ஆ) இக்கிராமத்தில் மூத்தம்மா செல்வாக்குமிக்கவர் என்பது எவ்வாறு உணர்த்தப்படுகிறது?

(20 புள்ளிகள்)

**(03)**

(i) **இலட்சியமும் சமநோக்கும்** என்ற கட்டுரையில்,

(அ) இலட்சிய வழியில் நின்ற ஒவ்வொருவரும் தம் இலட்சியத்துக்குச் சோதனை வந்த போது எவ்வாறான முடிவெடுத்து வெற்றி கொண்டமை

(ஆ) கட்டுரையாசிரியர் கையாண்ட உத்திகள்

என்பனவற்றை விளக்குக

**அல்லது**

(ii) **மூத்தம்மா** சிறுகதையில்,

(அ) மூத்தம்மாவின் பண்புகள்

(ஆ) சிறுகதையில் காணப்படும் கிராமப்புற வாழ்வியல் அம்சங்கள்

என்பன வெளிப்படுத்தப்படுமாற்றினை ஆராய்க.

(15 புள்ளிகள்)

**04.**

(i) **சீறி ஓடாத வருங்கால மனிதநதி** என்ற கவிதையில்,

(அ) எழுத்தறிவற்ற இளைஞனுக்காக வருத்தப்படும் கவிஞரின் மனநிலை

(ஆ) கவிதையில் நீர் நயந்த பகுதி

என்பவற்றை விளக்குக

***அல்லது***

(ii) **அற்றைத் திங்கள்** நாடகத்தில்,

(அ) போரின் பயங்கரம்

(ஆ) பாரி மகளிரின் துன்பத்திற்கான காரணம்

என்பன வெளிப்படுத்தப்படுமாற்றினை ஆராய்க.

(15 புள்ளிகள்)

**05, 06, 07 ஆகிய வினாக்களுள் ஏதாவது ஒன்றைத் தெரிவு செய்க**

**05**. திருக்குறளில், **பேதமை** எனும் அதிகாரத்தில்

(அ) பேதைமை என்றால் என்ன?

(ஆ) கையாளப்பட்டுள்ள அணிகள்

என்பவற்றை விளக்குக.

**06**. **குற்றாலக் குறவஞ்சி**யில்

(அ) கையாளப்பட்ட அணிகள்

(ஆ) குற்றாலநாதரின் சிறப்புக்கள்

என்பவற்றை விளக்குக.

**07**. நாவலர் எழுந்தார் என்ற கட்டுரையில் கட்டுரையாசிரியர் கையாண்ட உத்திகளை விளக்குக.

(10 புள்ளிகள்)

kalvi.lk

# இரண்டாம் தவணைப் பரீட்சை – 2019
## தரம் - 11 தமிழ்மொழியும் இலக்கியமும் I,II
## புள்ளித்திட்டம்
### பகுதி – I

| | | | |
|---|---|---|---|
| 1. *3 | 11. *3 | 21. *2 | 31. *2 |
| 2. *3 | 12. *2 | 22. *3 | 32. *4 |
| 3. *2 | 13. *1 | 23. *1 | 33. *2 |
| 4. *2 | 14. *4 | 24. *1 | 34. *2 |
| 5. *1 | 15. *2 | 25. *4 | 35. *3 |
| 6. *2 | 16. *1 | 26. *2 | 36. *1 |
| 7. *3 | 17. *4 | 27. *3 | 37. *1 |
| 8. *4 | 18. *1 | 28. *2 | 38. *2 |
| 9. *3 | 19. *1 | 29. *2 | 39. *4 |
| 10. *2 | 20. *3 | 30. *3 | 40. *3 |

Education கல்வி අධ්‍යාපන

### பகுதி : II
**விடை**

1) 1. எல்லை+ இல்லா+ இன்பம்+ அடைதற்கு + இடையூறு + என்றே + இயம்பாய்

2. அ) உருவக அணி

ஆ) குணம் ஆகிய குன்று – பண்புத் தொகை

3. ''தலை இருக்க வால் ஆடக்கூடாது. எல்லாத்துக்கும் ஐயா வரட்டும'' என்று சொல்லிக் கொண்டு அம்மா போகின்றார்.

4. பிரிவின் கண் பீழை தருவதொன்றில்
பேதையார் கேண்மை பெரிது இனிது

5. சிநேகிதர்களோடு/ நண்பர்களோடு பட்டணத்திற்கு சயிக்கிளிலே/ துவிச்சக்கரவண்டியிலே செல்வதற்கு புறப்பட்டுவிட்டார்.

1. அ) அறிவித்தல்

ஆ) அறிவுறுத்தல்

2. இடைச் சொல் - ஏ

பொருள் - பிரிநிலை

3. கேட்போரை ஈர்த்து வைத்திருக்கும் திறன்

உச்சரிப்பு, தொனி வேறுபாடு

வர்ணிக்கும் நிகழ்ச்சி பற்றிய முன்னறிவு

4. ஆலி – மழைத்துளி, ஒலி

ஆழி – கடல், மோதிரம், சக்கரம்

5. உயர்ந்த அவரை பார்த்தீர்களா?

உயர்ந்து அவரை பார்த்தீர்களா?

2) பொருளமைவும் அளவும் 12

கருத்து வெளிப்பாடும் மொழிச் செம்மையும் 06

எழுத்து நுட்பங்கள் 05

தலையங்கம் 02

25 புள்ளிகள்

3) விடய உள்ளடக்கம் 06

சொல்லளவு 02

மொழிநடை 02

10 புள்ளிகள்

சுருக்கத்தில் உள்ளடக்கப்பட வேண்டிய கருத்துக்கள்

- ❖ அறிவு எல்லையற்றது
- ❖ எம்மிடத்தில் நிறைவான அறிவு இருக்குமிடத்தில் நாம் பிறருக்கு அறிவுரை வழங்கலாம்
- ❖ பிறருடன் கலந்தாலோசிக்க வேண்டும்
- ❖ நாம் கற்பதன் மூலம் அடைய நினைக்கின்ற இன்பத்தை அடையலாம்

4) 1. மணிக்கொடிகாலம்

2. புதுமைப்பித்தன், க.நா.சு. சண்முகசுந்தரம்

3. பாரதியார்

4. சிறுகதை, நாவல்

5. புனைகதை இலக்கிய வடிவங்கள் தோற்றம் பெறுதல், புதுக்கவிதை தோற்றம் பெறுதல்

(10 புள்ளிகள்)

5) <u>கடிதம்</u>

அமைப்பு 05

உள்ளடக்கம் 07

மொழிநடை 03

15 புள்ளிகள்

Education கல்வி අධ්‍යාපන

பகுதி : III

விடைகள்

01) 01) அ) புறநானூறு ஆ) பறம்பு மலை

02) அ) தேனாகிய அருவி மலையிலிருந்து வழிவது போன்று கலப்பை கொண்ட உழவனின் உடலிலிருந்து வியர்வை வழிதல்

ஆ) வேற்றுமைத் தொகை

03) அ) காசிம்/ மூத்தம்மாவின் பேரனால் மூத்தம்மாவுக்கு

ஆ) தனது தாயாரை மரணத்தில் இருந்து காப்பாற்றி இருக்கலாம் என்ற ஏக்கம்.

04) அ) தொடி – பூண், தண்டு – ஊண்றுகோல்

ஆ) துறை - கையறுநிலை

05) அ) ஏழு பிறப்பு ஆ) வருந்தும்

06) அ) குகனால் பரதனுக்கு ஆ) கைகேயியை

07) அ) கரும்பு ஆ) பாவம்

08) மாணிக்கவாசகர் ஆ) அஞ்சேன்

09) அ) விலக்கி ஆ) யானை போன்றவர்களது நட்பை விலக்கி நாயை போன்றவர்களது நட்பை தழுவிக்கொள்ள வேண்டும்.

10) அ) சங்கவையால் அங்கவைக்கு ஆ) சோகம்/ பிரிவுத்துயர்

(10x2= 20 புள்ளிகள்)

**02)**

01) அ) பூண் பூட்டப்பட்ட தலையையுடைய தண்டுகோலை / ஊன்று கோலை ஊன்றித் தளர்ந்து இருமலுடன் நெருங்கிய சில வார்த்தைகளையுடைய முதுமை.

ஆ) கள்ளம் கபடமற்ற மறைவில்லாத உள்ளம் கொண்டவன்

02) அ) கோக்கள் வைகும் முற்றத்தான் முதல்தேவி, மன்னர்களெல்லாம் அடி வணங்கும் முற்றத்தையுடைய தசரதசச்சக்கரவர்த்தியின் முதல் தேவி கோசலை ஆவாள்.

ஆ) பரதன் குகனுக்குக் சோசலையைப் பற்றி கூறுதல்

03) ஆ) பொருட்பிழையெல்லாவற்றையும் விலக்கிவிட்டு ஏனையவற்றைக் கற்று அருவிகள் வழியும் பொதிகை மலையினைக் காலூன்றிக் கவிதை பொழியும் புலவர்களின்மனத்தே முடிங்கி மின்னிக் கொண்டு புறப்பட்டதாகக் கூறப்படுகின்றது.

ஆ) அணிச்சிறப்புகள்

04) அ) விளக்கு வைப்பதற்கு ஏதுவான சிறிய பகுதி மாடம் எனப்படும். மாடத்திலிருந்து விளக்கை வெளியே இழுத்து வைக்க வசதியாக அமைந்த மரக்கட்டை மாடா எனப்படும்.

ஆ)கணினிப் பொறியில் தனியான கோப்பினை உருவாக்கிச் சரியான முறையில் சேமித்து உரியவாறு இவற்றைப் பயன்படுத்தின் எதுவுமே காணமற்போய்விடாது கணினிஎதையுமே தானாக மறைக்கவோ, அழிக்கவோ முயலாது என்பதில் கதாசிரியர் கொண்டிருக்கும் நம்பிக்கையைக் காட்டுகிறது.

05) அ) காட்டிற்குப் போய் ஆமணக்குக்கொட்டை பொறுக்கி அதை இடித்து உருக்கி உளுவரிசியும் நன்னாரி வேரும் நறுக்கிப் போட்டு எண்ணெயாய் காய்ச்சி தலைக்கு வைப்பதே கிராமியப் பழக்கம் ஆகும்.

ஆ) முடிசூடா குட்டி ராணி, பொது மனுஷி, அனுபவசாலி எனக் கூறப்பட்டுள்ளதன் மூலம் உணர்த்தப்படுகின்றது.

3) அ)

❖ அர்ச்சுனன் - மகாபாரதம் (இலக்கியம்)

"ஊனமே யான ஊனிடை ......................."

என்ற அடிகள் மூலம் விளக்கல்

(ஒருவர் உண்ணும் உணவினும், பருகும் நீரினும் அவருக்கு

இனியது, உயிரினும் பார்க்க இவருக்கு இனியது)

இவனது இலட்சியம் மானம்

❖ கண்ணகி மற்றும் பாண்டிமாதேவியின் இலட்சியம்

கண்ணகி – சிலப்பதிகாரம் (இலக்கியம்)

- விளைவு (தெய்வமானவள்)

- நீதியை நிலை நாட்டப் போராடி மதுரையை ஏரித்தல்

சிலப்பதிகாரம் - சேரமாதேவியின் கூற்று

அவரவர் அவரவர்களது இலட்சியத்தில் உயர்ந்தவர்கள்

("அத்திறம் நிற்க")

பாண்டிமாதேவி – கணவனோடு உடனிறத்தல்

- சிலப்பதிகாரம் (இலக்கியம்)

- கற்புடையாள் எனப் பெருமை பெற்றாள்

❖ அரிச்சந்திரன் - அரிச்சந்திர புராணம் (இலக்கியம்)

எழுதியவர் (வீர கவிராசர்)

- "பதியிழந்தனம் விளக்க வேண்டும் ............ எனும்

- பாடல்அடிகள் மூலம் விளக்க வேண்டும்

- இலட்சியம் :- கதியிழக்கினும் கட்டுரை இழக்காமை

(சத்தியத்தைப் பேணுதல்)

❖ மகாத்மாகாந்தி – காந்தி வரலாறு (இலக்கியம்)

- கலியுக அரிச்சந்திரன் எனப் போற்றப்பட்டார்

- அந்நியராட்சியை எதிர்த்தமை (இலட்சியம்)

❖ மாணிக்கவாசகர் - இறைவனின் திருவருளையே நாடி நிற்றல் (இலட்சியம்)

- "நரகம் புகினும் எள்ளேன் ..........." என்ற வரிகள் மூலம் விளக்க வேண்டும்.

❖ தருமர் - மகாபாரதம் (இலக்கியம்)

- மகாபாரதத்தில் மிகச் சிறந்த கதாபாத்திரம் தருமன்

- பிற உயிர்களையும் தன்னுயிர் போல நேசிக்கும் பண்புடையவன்
- தர்மம் தவறாதவன்
- புழுத்த நாயிற்கு கிட்டாத முக்தி தனக்கும் வேட்டாமென அறத்தை இலட்சியமாகக் கொண்டவர்

❖ தசரதன் - இராமாயணம் (இலக்கியம்)
- அயோத்தியின் சக்கரவர்த்தி
- கைகேயியிற்கு கொடுத்த வரம்
- சத்தியமா? ஆரசியலா என்ற சோதனை ஏற்பட்ட போது சத்தியத்துக்கே முன்னுரிமை அளித்து உயிரை நீத்தான்

❖ காதற்தலைவி –குறந்தொகை) - இலக்கியம்
- நல்ல தலைவனை அடைதல்

❖ கர்ணன் - மகாபாரதம் (இலக்கியம்)
- இல்லை எனாது தானம் வழங்கல்
( கவச குண்டலங்களை தானம் வழங்கல்)

❖ குமணன் - புறநானூறு (இலக்கியம்)
- மரணித்தும் கொடுக்கத் துணிதல் புலவருக்கு தன் தலையைக்கொடுத்தல்

( 9 புள்ளிகள்)

ஆ) எளிமையான தமிழ்ச் சொற்களைக் கையாளல்.
- தேவைப்படும் போது வடமொழிச் சொற்களையும் கலந்து எழுதுதல்.
- சிறு சிறு வாக்கியங்களையும் நீண்ட வாக்கியங்களையும் கையாளல்.
- தமிழிலுள்ள இலக்கியங்களைச் சான்றாதாரமாக்கி அவற்றிலுள்ள கதாப்பாத்திரங்களின் இலட்சியங்களை வெளிப்படுத்தியுள்ளார்.
- கொடை வள்ளல்களை மேற்கோள் காட்டி கட்டுரையை வளர்த்துச் செல்லல்.
- தேவைப்பட்ட சான்றாதாரங்களாப் பாடலடிகளையும் பயன்படுத்தியுள்ளார்.
- காரண – காரிய விளக்கத்துடனான உரைநடைச் சிறப்பு இக் கட்டுரையில் காணப்படுகிறது

இவற்றை உதாரணங்கள் மூலம் விளக்க வேண்டும்.

(6 புள்ளிகள்)

3) ii) அ) மூத்தம்மாவின் பண்புகள்
- வெற்றிலை போடுவதில் விருப்புடையவர்.
- பழைமையான பழக்கவழக்கங்களில் நம்பிக்கையுடையர்
(பக்குலைத் துரத்தல் போன்ற உதாரணங்களை எடுத்துக்காட்டல்)
- வீட்டு வைத்தியத்தின் மூலம் நோயைக் குணப்படுத்திக் கொள்பவள்.
- கிராமத்துப் பெண்ணாக விளங்கியவள்.
- குடும்ப பாசமுடையவள்
- தைரியம், உற்சாகம், கடின உழைப்பு, உதவி செய்யும் குணம் கொண்டவள்
- சுறு சுறுப்புத் தன்மை கொண்டவள்
-பேரன்புடையவள்.

உ+ம் : பேரக்குழந்தைகள் மீது

- அல்லுக்குத்துத் தோடுகள், கருகமணிமாலை, செப்புக்காப்புகள் அணிந்து அலங்காரமாய் இருப்பவள்.
- இவற்றை உதாரணங்கள் மூலம் விளக்க வேண்டும்.

(8 புள்ளிகள்)

ஆ) கிராம மக்களிடையே காணப்படும ஒற்றுமை
- பெரியவர்களுக்கு மரியாதை செய்தல்.
- பிரேததத்திற்கு அருகில் சாம்பிராணி புகைத்தல்.
- சேவல், நாய் போன்றவற்றை வளர்த்தல்.
- குழந்தை பேற்றினை வீட்டிலேயே வைத்துக் கொள்ளல்.
- தலைமுடியை கறுப்பாக்க ஆமணக்குக் கொட்டையை உளுவரிசி,நன்னாரிவேர் சேர்த்து எண்ணெய் காய்ச்சிப் பூசுதல்.
- விளாம்பழம், முந்திரிப்பழம் போன்றவற்றைச் சிறுவர்கள் விரும்பி உண்ணல்
- சந்தூக்கில் பிரேதம் எடுத்துச் செல்லல்.
- நேர்த்திக்கடன் செய்தல்.
- பசு வளர்த்துப் பால் கறந்து காய்ச்சிக் குடித்தல்.
- மரத்தின் கீழ் பாயை விரித்துச் சாய்ந்து இளைப்பாறுதல்.
- சிறு பிள்ளைகள் ஊஞ்சலில் ஆடுதல்.
- வெற்றிலை பாக்குடன் கராம்பு, சாதிக்காய் கூட்டையும் சேர்த்து இடித்து உண்ணல்.
- பக்குலை விரட்ட எடுக்கும் நடவடிக்கை.
-மடிமீது குழந்தையைப் போட்டுத் தாலாட்டித் தூங்க வைத்தல்.
- இவற்றை உதாரணங்கள் மூலம் விளக்க வேண்டும்.

(7 பள்ளிகள்).

4) 1)

அ) - பரிதாபமான வடிவமாயிருந்தான் என நினைத்தல்

- கையொப்பம் இடமுடியாத நிலைமைக்காக வெட்கிச் செத்த சிரிப்புச் சிரித்தான் என வேதனைப்படல்.

- காதலுணர்ச்சியை வெளிக்காட்ட ஒலியைத்தவிர எழுத்து அவனுக்குப் பயன்படாத நிலையை எண்ணி வேதனைப்படல்.

- இளைஞாகிய மனித நதி எழுத்துநிலைத் தொலைத்துவிட்ட காரணத்தால் வருங்காலத்தில் சீறிப்பாய முடியாமல் உறைகின்ற சிறு துளியாய் அடங்கி ஒடுங்கிவிடும் என கழிவிரக்கப்படல்.

- அவ் இளைஞனுக்கு எழுத்தறிவும் கல்வியும் கிடைக்கவில்லை என வேதனைப்படுதல்.

இவ்வாறானவற்றை விளக்கிக் கூறுதல் வேண்டும். பாடலடிகள் மூலமும் விளக்க வேண்டும்.

(8 புள்ளிகள்)

ஆ) – படிக்காதவன் உயிரோடு இருப்பினும் செத்தவனுக்குச் சமன் (இதனை விளக்கி நயத்துடன் கூறல்).

- கையொப்பமிடத் தெரியாமல் இருந்தமை
- காதலைக் கூட இனிமையாக அனுபவிப்பதற்குக் கல்வியறிவு தேவை என்பதை கூறல்.
- காதலியோடு பேசுவதற்குக் கூட மொழியறிவு இருந்தாலே அவளை கவருமாறு பேசலாம்.

இவற்றை நயத்துடன் எடுத்துரைத்தல்.

(7 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

2) அ) போரின் பயங்கரம்

- போர் மக்களைச் சொந்த இடத்திலிருந்து புலம்பெயர வைத்தது.

- உறவுகளை இழந்து எதிரிகளாக்கியது இவற்றைத் தாலாட்டுப் பாடல் மூலம் வெளிப்படுத்தல்.

''தாலாட்டில் அசைந்திருந்த .......''

'' ஏலம் பூ வாய் பொசுங்க ..........'' போன்ற வரிகள் மூலமும் போரின் பயங்கரத்தை வெளிப்படுத்தல்

(6 புள்ளிகள்)

ஆ) பாரி மகளிரின் துன்பத்திற்கு காரணம்
தந்தையை இழந்து வருந்தல்.

- தாம் பிறந்து வளர்ந்து நேசித்த மலையை விட்டுப் பிரிய வேண்டியதை நினைத்து வருந்தல்
- போரின் கொடுமைகளை எடுத்துக்காட்டல்
- மூவேந்தரின் சூழ்ச்சியால் மக்கள் பாரி மீது வைத்த நம்பிக்கையைக் காக்க முடியாமற் போனமையை நினைத்து வருந்தல். போன்றவற்றை விளக்கல்.
- கபிலர் அவர்களை ஆறுதற்படுத்துவதற்காக துயரத்தை வெளிப்படுத்தல்.
- இவற்றை விளக்கிக் கூற வேண்டும்.

( 9 புள்ளிகள்)

5) அ) பேதைமை என்றால் என்ன?

– குறள் 1, குறள் 2 மூலம் விளக்க வேண்டும்.

(5 புள்ளிகள்)

ஆ) குறள் 8, 10 என்பவற்றில் உவமை அணிகளைக் கையாளல்.
இவற்றை விளக்கிக் கூறல் வேண்டும்.

(5 புள்ளிகள்)

6) அ) –''தேனருவித் திரையெழும்பி வானின் வழி ஒழுகும்''
மந்தி சிந்து கனிகளுக்கு வான்கவிகள் கெஞ்சும்''
(உயர்வு நவிற்சி அணி)

- முழங்குதிரைப் புலனருவி கழங்கென முத்தாடும் (உவமை அணி)
- தேனலர் சண்பமகவாசம் வானுலகில் வெடிக்கும்
(உயர்வு நவிற்சி அணி)
- தாழை சோறிட வாழை குருத்திடும் ( உருவக அணி)
- போன்ற அணிகள் மூலம் விளக்கிக் கூற வேணடும்)

(6 புள்ளிகள்)

ஆ)''கூனலிளம் பிறை முடிந்த வேணியிலங்காரர்''
''வழங்கு கொடை மகாராசர் குறும்பல வினீசர்''
நாதமூன்றுருவான குற்றாலநாதர்''
போன்ற வரிகள் மூலம் விளக்கிக் கூற வேண்டும்.

(4 புள்ளிகள்)

7) – வடமொழிகளை பயன்படுத்தல்.

- சிறுசிறு வாக்கியங்களை கையாளல்.
- நனவோடை உத்தி.

(கதைக்குள் கதைகூறும் உத்தி)

kalvi.lk

- எளிய மொழிநடையை கையாளல்.
- வர்ணணை உத்தியை கையாளல்.
- இலக்கிய பாடல்களைக் கையாண்டமை.

  "பொழிந்த நெய்யாகுதி...."
- இலக்கிய வசனங்களை எடுத்துக்காட்டி வாதப் பிரதிவாதங்களை விளக்கியமை.

  இவற்றை உதாரணங்கள் மூலம் விளக்க வேண்டும்.

(10 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

# GRADE 6-11

## STUDY WITH US..!

# ICT

## ONLINE CLASSES

இலங்கை முழுவதும் உள்ள மாணவர்களை இணைத்து Google Meet செயலி மூலமாக
இணைய வழியில் நடைபெறும் ICT பாட நிகழ்நிலை வகுப்புகள்.

Conducted by

**Pathmanathan Pathmaraj**

(BIT,  B.COM, PGDM, MBA, ACPM, MCP, N+)



**TAMIL MEDIUM**

**ENGLISH MEDIUM**

**MONTHLY**

**600/=**

Whatsapp ஊடாக எம்மை தொடர்பு கொண்டு வகுப்புகள்
தொடர்பான மேலதிக விபரங்களை அறிந்து கொள்ள முடியும்.

**075 287 1457**

கல்வி
Digital Learning Platform

www.kalvi.lk

## எங்கள் குறிக்கோள்

**எண்ணிம உலகத்தில் மாணவர்களிற்கென சிறந்ததொரு கற்றல் கட்டமைப்பை உருவாக்குதல்.**

அனைத்தும் டிஜிட்டல் மயப்படுத்தப்பட்ட இந்த காலத்தில் பல்வேறு துறைகளும் கால ஓட்டத்துடன் இணைந்து டிஜிட்டல் தளத்தில் பல்கிப்பெருகி வருகின்றன. அந்த வகையில் கல்வித்துறையும் இதற்கு விதிவிலக்கல்ல. இணையவழி கல்வியின் மூலம் கலவித்துறை புதியதொரு பரிமாணத்தை எட்டியுள்ளது. குறிப்பாக கொரோனா பேரிடர் காலத்தில் நாடே முடக்கப்பட்டிருந்தது. இதனால் மாணவர்களிற்கும் பாடசாலை, கல்வி நிறுவனங்களிற்கு இடையிலான தொடர்பு துண்டிக்கப்பட்டது. அந்த இக்கட்டான சூழ்நிலையில் இணையவழி வகுப்புகள் மாணவர்களிற்கு வரப்பிரசாதமாக அமைந்தது என்பதே உண்மை.

இன்று தொழில்நுட்பம் மாணவர்களை தவறான பாதைக்கு இட்டு செல்வதாக ஓர் எண்ண ஓட்டம் மக்கள் மத்தியில் உள்ளது. தொழில்நுட்பம் என்பது ஒரு கருவி மட்டுமே அதை எவ்வாறு பயன்படுத்துகிறோம் என்பதில் அதன் ஆக்க மற்றும் அழிவு விளைவுகள் தீர்மானிக்கப்படுகிறது. உளியை கொண்டு சிலையை செதுக்க நினைத்தால் அவன் நிச்சயம் சிற்பி ஆகலாம். இங்கு பிரச்சினையாக காணப்படுவது மாணவர்களை வழிப்படுத்த தொழில்நுட்ப உலகில் ஓர் முறையான கட்டமைப்பு இல்லாமையே. அதை உருவாக்குவதே எங்கள் நோக்கம். அதை நோக்கியே எங்கள் பயணம் அமையும்.

**எமது இணையத்தினூடக ஊடாக உங்களிற்கு தேவையான பரீட்சை வினாத்தாள்களை இலகுவான முறையில் தரவிறக்கம் செய்து கொள்ளமுடியும்.**

# kalvi.lk

**கல்வி சார் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள எமது சமூக ஊடக தளங்களின் ஊடாக உடனுக்குடன் அறிந்து கொள்ள முடியும்.**

Viber Community

Whatsapp Channel

Facebook Page